# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்


பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூ | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை

ஜெ. வினோதினி,
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**முன்னுரை**

அகப்பாடல்களில் தலைவியின் நலனைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுபவள் செவிலி. தலைவி வளருகின்ற பருவத்தில் செவிலி அவளுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணிப்பவளாக இருப்பதைக் காணமுடிகிறது. செவிலிதான் நற்றாயக்கு தலைவி குறித்துக் கூறுபவளாக அமைகிறாள். அத்தகைய செவிலியின் நிலையையும் குறித்து கட்டுரையில் காணலாம்.

**செவிலி அறத்தொடு நிற்றல்**

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள். அதுபோல் செவித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள். அழகிய வீரக்கழலையும், செம்மையான இலை வடிவற்றாய வெள்ளிய வேலையும் உடைய தலைவனோடு பலவாகத் தொகுக்கப்பட்ட வளைகளைப் பூண்ட பழைய ஆலமரத்தடியின் கண்ணே உள்ள ஊர்ப் பொதுவிடத்தில் தங்குதலையுடைய நீடு மொழி உண்மையாவதைப் போல, முரசு முழங்கவும், சங்கு ஒழிக்கவும் செய்ததால் உண்மையாகிறது.

"..............................................................
சேயிலை வெள் வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே"

- (குறுற்.பா.15)

என்ற பாடல் வரிகள் தலைவி, தலைவனோடு கொண்ட நட்பு உறுதியானது என செவிலி கூறுவதாக அமைந்துள்ளது.

**செவித்தாயின் வருத்தம்**

தலைவி, தலைவனோடு உடன்போக்கு சென்ற பின்பு அதனை அறிந்த செவிலித்தாய் வருந்தியதாக, கழலும்படி இட்ட தோள் வளையானது உடைய 'ஆய்' என்னும் வள்ளலுடைய மேகம் மலையில் வேங்கை மலரினுடைய மணத்தையும் ஒருங்கே பெற்றவளும் ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சியை உடையவளுமான மகள், யான்

தழுவிய போது வியர்வை அடைந்ததாக கூறினாள். அங்ஙனம் என் தழுவல் அவளுக்கு வெறுப்பு உண்டாக்குவதற்குரிய காரணத்தை அப்பொழுது அறியவில்லை. ஆயினும் இப்பொழுது தலைவனின் முயக்கத்தை விரும்பியதால் தாயின் தழுவுதலை வெறுத்தாள் தலைவி என்று செவிலித்தாய் கூறுகின்றாள்.

இதனை

"என்றும் உள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சனைத் தேற்றிய வஞ்சினைக் காளையோடு
அழுங்கல் மூதூர் அலஞெனச்
செழும்பல் குன்றம் இறந்தஎன் மகளே"

- (ஐயங்.பா.372)

என் மகளின் இளமையுடைய நெஞ்நை கவர்ந்துகொள்ளும்படி கள் பொழிந்து தெரிவித்த பிறர் மகன் ஒருவனோடு, பிறர் பழியாண்டும் தூற்றி ஆரவாரம் செய்யும் இயல்புடைய பழமையான இவ்வூரின்கண் யாண்டும் அலர் உண்டாகும்படி வளப்பமுள்ள பல மலைகளைக் கடந்து வெப்பம் மிகுந்த பாலைநிலத்தில் என் அரும்பெறல் மகள் அங்ஙனம் போகும் போது என்னை ஒரு முறை றினைத்திருப்பவளோ என்று செவிலி வருந்துகின்றாள்.

## செவிலித்தாயின் அச்சம்

கழினடத்து மலர்ந்த காவி மலர்களைப் பறித்தும், கடலின் உள்ள வெள்ளிய தலையை உடைய அலையினிடத்து விளையாடியும், தன்னோடு என்றும் பிரிவு இல்லாத ஆயத்தார். தத்தமக்குரிய விளையாட்டில் ஈடுபட்டிருக்க அவள் ஈடுபாடு கொள்ளாளாகி, விரைந்து செல்லும் மேகங்கள் தவழும் உச்சியை உடைய உயர்ந்த மலைகளை உடைய அந்த வெம்மை மிகுந்த பாலைவழியின் படுக்கை கற்கள் அடியின் அழகினைச் சிதைக்க அவனோடு போயினள்.

"கோள்சுரும்பு அரற்றும் நாள்சுரத்து அமன்ற
நெடுங்கான் மராஅத்துக் குறிஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு றின்று
மள்ளன் உள்ள மகிழ்கூர்ந்து அன்றே
பஞ்சாய்ப் பானவக்கும் தனக்கும்
அம்சாய் கூந்தல் ஆய்வது கண்டே"

- (ஐயங்.பா.383)

இந்த விடியற் காலத்தே தன் ஆருயிர்க் காதலியாகிய இந்த நங்கை பாலை நிலத்தில் மராமரத்தினது குறிய கிளையை வளைத்துப் பிடித்துக்கொண்டு தேனின் பொருட்டு, தன் செலவு தவிர்த்து அவளையே

அம்மலர்களை விளையாட்டுப் பாவைக்கும் தனக்குமாக இரு கூறுபடுத்தும் செயலைக் கண்டு செவித்தாய் அச்சம் கொள்ளுகிறாள்.

**மனை மரட்சி**

தலைவனும், தலைவியும் இல்லறம் மனைக்குச் சென்று வந்த செவிலி நற்றாயிடத்து, தலைவியின் இல்லற மாண்பு கூறுவதை முற்றிய கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையை துவைக்காமல் உடுத்திக் கொண்டு, குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணப்ப, தானே துழவிச் சமைத்த இனிய புளிப்பை உடைய குழம்பை, தன் தலைவன் இனிதென்று உண்பதால் தலைவியின் முகமானது அண்ணியதாய் மலர்வதைச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறி இன்புறுகிறாள்.

"..........................................
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"- (குறுற்பா. 167)

என்ற பாடல் வரிகள் தலைவியின் அன்பு நலம் கண்ட செவிலி மகிழ்ச்சி வெளிப்பட காணலாம். இதைப்போல்,

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின்றின் கிளையோடு ஆரப்
பச்சூன்பெய்த பைற்றின வல்சி
பொலம்புனை கலத்தில் தருகவென்மாதோ
வெம்சி விறல்வேல் காளையோடு
அம்சில் ஒதியை வரக்கரைற்தீமே"

குற்றம் சிறிதும் இல்லாத சிறனையுடைய சிறிய காக்கையே கேள்! நீ நின்னுடைய சுற்றத்தாரோடும் நிரம்ப உண்ணும்படி சிறந்த பொற்கலத்தில் பெய்து பசிய நினைத்தால் சமைத்த நல்லுணவை நினக்கு உணவாகக் கொடுப்பேன். அழகிய சிறிய கூந்தலையுடைய என் மகளை வெற்றி வேல்படையையுடைய அந்த நம்பியோடு மாண்போடு மனையில் உள்ளாள் என்று செவிலி கூறுகின்றாள்.

**முடிவுரை**

செவுலித் தாய் அறத்தொடு நிற்கின்ற சூழலையும், தாயின் வருத்த நிலையினையும் மாற்றும் செவிலியின் அச்சத்தினையும், தலைமகளின் மனை மரட்சினையும் சிறப்பாக இக்கட்டுரையில் சிறப்பாக குறிப்பட்டுள்ளது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4